**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.101/2018**
**Prosecution Witnesses : 10**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுமதி, காவல் ஆய்வாளர் | Caste | : |
| Father 's Name / Husband Name | : சித்தையன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது தென்காசி மாவட்டம் சாம்பவர் வடகரையில் காவல் ஆய்வாளராகவும் அயல்பணியாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 30.07.2018ம் தேதி மதுரை மாவட்டம் திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருக்கும் போது எனக்கு முன்பு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் திருமதி.மீனா என்பவர் வழக்கு பதிவு செய்து முதல் கட்ட புலன் விசாரணையை முடித்து வைத்திருந்த திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண். 71/2017 ச/பி. 294(பி), 506(1), 406, 498(எ), 494 இதச வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகள் சங்கரேஷ்வரி, மாரியப்பன், அண்ணபுஷ்பம், முத்துகருப்பன், முனியாண்டி, மணி ஆகியோர்களை விசாரணை செய்தேன். சங்கரேஷ்வரி என்பவரை விசாரணை செய்து அவர் அளித்த சான்றுகள் பெற்று மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி 1 மற்றும் எதிரி 5 இருவரும் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்களை கைப்பற்றினேன். மற்ற சாட்சிகள் காவல் ஆய்வாளர் மீனா

அவர்களிடம் கூறியது போலவே என்னிடமும் வாக்குமூலமும் அளித்ததால் தனியாக அவர்களுக்கு வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை. மேலும் முத்துமாரி, பஞ்சவர்ணம், ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்பு விசாரணையை முடித்து எதிரிகள் மீது 294(பி), 506(1), 406, 498(எ), 494 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் கு.வி:**

30.07.2018ம் தேதி நான் வழக்கு கோப்பை திருமதி. மீனா அவர்களிடம் இருந்து பெற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். எனது விசாரணைக்கு முன்பாக வழக்கு கோப்புகளை நான் கையாளவில்லை என்று சொன்னால் சரிதான். திருமதி. மீனா அவர்கள் சங்கரேஷ்வரியிடம் எடுத்த வாக்குமூலத்தை நான் பார்வையிட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் 5ம் எதிரி மற்றும் 1ம் எதிரி சேர்ந்து வாழ்ந்த வீட்டிற்கு அ.சா.1 சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு குழந்தை பிறந்த பிறகு குழந்தையை பார்க்கவரவில்லை என்பதால் அந்த வீட்டிற்கு சென்றதாக எனது விசாரணையில் சொன்னார்கள் என்றால் 05.06.2018ம் தேதி வீட்டிற்கு சென்றதாக சொல்லியுள்ளார். எங்கு இருந்து போட்டோவை எடுத்ததாக சொன்னார் என்றால் வீட்டில் இருந்து எடுத்ததாக சொன்னார். அவர் அங்கு இருந்து தான் எடுத்ததாக எதாவது சாட்சி சொல்லியுள்ளார் என்றால் இல்லை. என்னிடம் கொடுத்த மறுவாக்குமூலத்தில் 1 வது சாட்சி எந்த முகவரியில் அவர்கள் இருந்ததாகவோ அந்த இடத்திற்கு சென்று விசாரித்ததாகவோ சொன்னார்களா என்றால் முகவரி சொல்லவில்லை. அந்த முகவரியில் சென்று 1ம் எதிரி மற்றும் 5ம் எதிரி சேர்ந்து வாழ்ந்ததை நான் சோதனையிடவில்லை என்று சொன்னால் அதற்கு அவசியம் ஏற்படவில்லை. எங்கேயாவது 1ம் எதிரிக்கும் 5ம் எதிரிக்கும் எங்கு திருமணம் நடைபெற்றதாகவோ அல்லது எந்த தேதியில் நடைபெற்றது என்பதற்கான ஆவணங்களோ என்னுடைய புலன் விசாரணையில் துலங்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.3ல் சட்டப்பூர்வமான சான்றிதழ்கள் ஏதும் உள்ளதா என்றால் கொடுத்தேன். என்னுடைய விசாரணையில் 25

பவுன் போட்டதாக சொல்லியுள்ளார்கள். இந்த வழக்கில் 1 முதல் 4 எதிரிகள் பாலில் ஏதோ கலந்து என்னை குடிக்க வற்புறுத்தினார்கள் நான் குடித்து மயங்கிவிட்டேன் என்று எனது விசாரணையில் சொல்லியுள்ளார்கள். எதிரி 1 மற்றும் 5ம் எதிரி எங்கு குடிருந்தார்கள் என்பதும் அதன் அருகில் இருப்பவர்களையும் நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி பஞ்சவர்ணம் மற்றும் முத்துமாரி இருவரையும் நான் விசாரிக்காமலேயே விசாரித்ததாக கற்பனையின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. அ.சா.1ம் 1ம் எதிரியும் கள்ளிக்குடியில் தனிக்குடித்தனம் இருந்தாக என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார்கள். ஆனால் அவர்கள் வீட்டின் அருகில் வசித்தவர்களை நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சரியான முறையில் புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும் 5ம் எதிரிக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு விதத்திலும் 1 முதல் 4 எதிரிகள் மீது தேவையற்ற விஷயங்களை கூறி அடிக்கடி புகார் கொடுப்பதும் அவர்களை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கில் கொடுக்கப்பட்ட பொய்யான புகாரின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 1 முதல் 4 எதிரிகளுக்கான குறுக்கு விசாரணயை ஏற்றுக் கொள்வததின் பேரில் அதே குறுக்கு விசாரணை அடாப்ட் செய்யப்படுகிறது.

**மறுவிசாரணை** இல்லை.